பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 28 சனிக்கிழமை 16.11.2024 கதிர் 009

## இனி இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்த, தமிழ்த் தேசியத்தை உதட்டளவில் பேசும் எல்லாக் கட்சிகளும் மீண்டும் தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரிவிடத் தயாராகி விட்டார்கள் என்று அறியமுடிகின்றது. ☞ 2

# தனிப் பெரும் கட்சியாக தமிழ் அரசு பேரெழுச்சி

## வடக்கு கிழக்கு எங்கும் 8 ஆசனங்கள் பெற்று நாடாளுமன்றின் 3ஆவது பெரும் கட்சியானது

2024 நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தனிப்பெரும் கட்சியாக தமிழ் அரசுக் கட்சி எழுச்சி பெற்றுள்ளது. போருக்குப் பின்னரான காலத்தில் தமிழ் அரசுக் கட்சியின் பெயர் மற்றும் வீட்டுச் சின்னத்தில் பல கட்சிகள் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டு வந்தன. 15 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக வடக்கு கிழக்கின் அனைத்துத் தேர்தல மாவட்டங்களிலும் போட்டியிட்ட தமிழ் அரசுக் கட்சி, போட்டியிட்ட அனைத்து மாவட்டங்களில் பிரதிநிதிகளைப் பெற்று மொத்தம் 8 ஆசனங்களுடன் தனியொரு கட்சியாக எழுச்சி பெற்றுள்ளது.

இதன் மூலம் நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெற்ற மூன்றாவது தனிக் கட்சியாகவும் உயர்ந்துள்ளது. 10ஆவது நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 40 ஆசனங்களையும் பெற்று முதலிரு இடங்களையும் பிடித்துள்ளனன.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டது. அனைத்து மாவட்டங்களிலும் பிரதிநிதிகளைப் பெற்றதன் மூலம் 7 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. தேசியப் பட்டியல் மூலம் அதற்கு ஒரு ஆசனம் கிடைத்துள்ளது.

இந்த மாவட்டங்களில் தமிழ் அரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட எந்தவொரு தமிழ்க் கட்சியும் ஒரு ஆசனத்திற்கு மேல் பெற முடியாமல் படுதோல்வியடைந்துள்ளன. தமிழ் ☞ 2

## தேசியப் பட்டியல் ஊடாக எம்.பியாகவே மாட்டேன்

### சுமந்திரன் தெரிவிப்பு



நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் தான்தெரிவுசெய்யப்படாதநிலையில்தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்துள்ள தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குச் செல்லமாட்டேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 8

## அமைச்சர் விஜித ஹேரத் சாதனை



2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று ☞ 8

## தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்தது வரலாற்று ரீதியானதொரு வெற்றி

### சுமந்திரன் பாராட்டு

2024 நாடாளுமன்றத் தேர்தலில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியைப்பெற்றுள்ள தேசிய மக்கள் சக்திக்குத் தனத் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ருமான சுமந்திரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 8




## மக்கள் கொடுத்த ஆணைப்படி வாக்குறுதியை நிறைவேற்றுக

### அநுரவுக்குத் தமிழ் அரசுக் கட்சி அழுத்தம்

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுச் சாதனை படைத்துள்ள நிலையில், மக்கள் வழங்கிய ஆணைப்படி தனது தேர்தல் ☞ 8

## ‘மறுமலர்ச்சி யுகத்தின் வெற்றி’ அரசுத் தலைவர் பெருமகிழ்ச்சி

2024 நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ள வரலாற்று வெற்றியை மறுமலர்ச்சி யுகத்தின் வெற்றி என்று கொண்டாடியுள்ளார் அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்க.

நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துவமான வெற்றியை வழங்கிய வாக்காளர்களுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தமது நன்றியை தெரிவித்து தனது ’எக்ஸ்’ தள பக்கத்தில் நேற்றுப் பதிவிட்டிருந்தார்.

அதில் ”மறுமலர்ச்சியுகத்தை ☞ 2

## யாழ்ப்பாணத்தில் கிடைத்தது பெரு வெற்றி என்கிறது தேமச

இன ஐக்கியத்தை வெளிப்படுத்தும்வகையில் தேர்தல் பெறுபேறுகள் அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த வெற்றி பெரு வெற்றி என்று பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவான சமன் வித்தியாரத்ன ☞ 8

## தமிழ்த் தேசியப் போராட்டம் தொடரும் வென்ற பின் சாணக்கியன் அறிவிப்பு

தமிழ்த் தேசியப் போராட்டம் தொடரும்; அதில் எந்த மாற்றமும் இல்லை என்று 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சாணக்கியன் தெரிவித்தார்.

தேர்தல் பெறுபேறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவரது களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள வீட்டிற்குச் சென்ற ஆதரவாளர்கள், அவரது வெற்றியைக் கொண்டாடினார்கள். குழுமியிருந்த நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள அவரது பாட்டனார் இராசமாணிக்கம் சிலைக்கு மலர் மாலை அவர் அணிவித்ததைத் தொடர்ந்து குழுமியிருந்த ஆதரவாளர்களால் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவிக்கப்பட்டு அவர வரவேற்கப்பட்டார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

இது என்னுடைய வெற்றி அல்ல. ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு மக்களுடைய வெற்றியாகும். நாடு முழுவதும் திசைகாட்டி சின்னத்துக்கும் ☞ 8

## கட்சியின் தேர்தல் பிரகடனம் அப்படியே அமுல்படுத்தப்படும்

### தேவைப்பட்டால் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்துவோம் என்கிறார் ரில்வின் சில்வா

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் போது தேசிய சக்தியால் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடனம் அப்படியே அமுல்படுத்தப்படும். தேவை ஏற்படும் இடங்களில் மக்களின் கருத்தறியும் பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கும் தயங்கமாட்டோம் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவைக் காரணம் காட்டி மீண்டும் ஒற்றுமைக் குரல் எழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள் இவர்கள்.

இப்போதும் மக்களின் நலன் குறித்த கட்சிச் செயற்பாடுகள் மீது அக்கறை செலுத்துவதைவிட்டுவிட்டு அடுத்தடுத்த தேர்தல்களில் எப்படித் தமிழ் அரசுக் கட்சியோடு சேர்ந்துகொண்டு அதன் வாக்கு வங்கியில் தாங்களும் ஆசனங்களைக் கைப்பற் முடியும் என்பதிலேயே குறியாக நிற்கின்றார்கள இவர்கள்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தனிப் பெரும் கட்சியாக தமிழ் அரசுக் கட்சி பேரெழுச்சி பெற்றிருந்தாலும், யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் அது ஒவ்வொரு ஆசனத்தை மட்டும் கைப்பற்ற முடிந்தமை பின்னடைவாகவே கருதப்படுகின்றது. இத்தனைக்கும் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூ-ட்டமைப்பாகப் போட்டியிட்டபோது பெற்ற 10 ஆசனங்களில் தமிழ் அரசுக் கட்சிக்கு 6 ஆசனங்கள் மட்டுமே இ-ருந்தது. இம்முறை அதிலும் பார்க்க 2 ஆசனங்கள் அதிகமாகப் பெற்று 8 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஆனாலும் யாழ்ப்பாணத்தில் சுமந்திரனும் வன்னியில் கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கமும் அடைந்திருக்கக்கூடிய தோல்விகள் பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றன.

இதேநேரம் கடந்த பல தசாப்தங்களாகத் தமிழ்அரசுக்கட்சியின்வாக்குவங்கியில்சவாரி செய்து வந்த புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் கட்சிகளின் கூட்டான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தத் தேர்தலில் தனது நான்குஆசனங்களில்மூன்றைஇழந்துள்ளது. வன்னியில்மட்டுமேஒருஆசனத்தைஅதனால் கைப்பற்ற முடிந்துள்ளது. மற்றொரு கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியினாலும் எந்தவொரு ஆசனத்தையும் கைப்பற்ற முடியவில்லை. தேர்தலுக்குப் பெருமளவில் பணத்தைக் கொட்டிச்செலவழித்தபோதும்அந்தக்கட்சியால் ஒரு ஆசனத்தைக்கூடப்பெறமுடியவில்லை.

அது தவிர, இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியில்வேட்பாளர்வாய்ப்பு மறுக்கப்பட்டதும் புற்றீசல்கள் போன்று கிளம்பிக் கட்சி தாவியும் சுயேச்சையாகவும் போட்டியிட்ட ஒருவர்கூட தேர்தலில் வெற்றிபெறவில்லை. பதிலாக எந்த அரசியல் பின்னணியும் இன்றி வந்த சுயேச்சையான மருத்துவர் அருச்சுனா வெற்றிபெற்றார். வேட்பாளராகும் வாய்ப்புக் கிடைக்காததால் தமிழ் அரசில் இருந்து தாவிய, மாமனிதர் ரவிராஜ்ஜின் மனைவி சசிகலா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் சரவணபவன், சட்டத்தரணி தவராசா, உமாகரன் இராசையா, விமலேஸ்வரி, மிதிலைச்செல்வி, குணாளன் என்று ஏராளமானோரில் எவருமே வெற்றிபெறவில்லை.

அதுவும்போக யாழ்ப்பாணத்தில் சுமந்திரனும் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிறீதரனையும் கிழக்கில் சிறீநேசனையும் முன்வைத்து மீண்டும் ஒற்றுமை என்ற போலிக் குரலின் கீழ் தமது அரசியல் வாய்ப்புக்களை அதிகரித்துக்கொள்வதற்கானமுயற்சியில்இந்தத் தரப்புக்கள் இறங்கிவிட்டன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் யாழ். மாவட்ட விருப்பு வாக்குவிவரங்கள்அறிவிக்கப்பட்டு, சுமந்திரன் தோல்வியடைந்தார் என்பது உறுதியான கணம் முதலே அகமகிழ்ந்துபோன இந்தத் தரப்புக்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தமது இடத்தைஉறுதிப்படுத்தும்நோக்கத்தோடுதமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரிவிடுவதற்குத் தயாராகிவிட்டன.

இதேவேலை 2-015இலும் நடந்தது. அப்போதும் பெருந்தோல்வியை அடைந்த தமிழக் காங்கிரஸ், ஈபிஆர்எல்எவ் ஆகியன தமிழ் அரசுக் கட்சியோடு முரண்டுபிடித்துக்கொண்டு நின்ற விக்னேஸ்வரனையும் கூட்டமைப்புக்குள் தாங்களும்ரௌடிதான்என்றுகாட்டவிரும்பிய ரெலோ, புளொட்டோடும் சேர்ந்துகொண்டும் சில மருத்துவர்கள் மற்றும் குடிமைச் சமூகச் (சிவில் சமூகம்) செயற்பாட்டாளர்களோடும் சேர்ந்துகொண்டும் தமிழ் மக்கள் பேரவை என்ற ஒன்றை உருவாக்கினார்கள். அடுத்த தேர்தலுக்கு இடையில் அந்தக் கூட்டு இயற்கை இறப்பை எய்தியது.

அதன் பின்னர் 2024 அரசுத் தலைவர் தேர்தலின்போது இந்த தமிழ் மக்கள் பேரவையின் அடியொற்றி அதில இருந்த பலரும் வேறு பலரும் சேர்ந்துகொண்டு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கி ஆரவாரப்படுத்தினர். 7 அரசியல் கட்சிகளோடு சரிக்குச் சமமாக உடன்படிக்கைசெய்துகொண்டுதமிழ்தேசியத் திரட்சியைச் சாதகமாக்கப் போகின்றோம் என்று கூச்சலிட்டனர். அவர்களை நம்பி அரசுத் தலைவர் தேர்தலில் அவர்களால் வேட்பாளராகநிறுத்தப்பட்டஅரியநேத்திரனுக்கு 2 லட்சத்து 26 ஆயிரம் வாக்குகளையும் தமிழ் மக்கள் வழங்கினர். ஆனால் மூன்று மாதங்களுக்குள் அதன் ஆயுள் காலமும் முடிவுக்கு வந்தது.

அந்தப் பொதுக் கட்டமைப்பில் சரி நிகர் சமானமாக அரைப் பங்கைக் கொண்டிருந்த குடிமைச் சமூகங்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்பட்ட 7 பேரையும் குனியவைத்து முதுகில் குத்திய அரசியல் கட்சிகள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் பொதுக் கட்டமைப்பின் அரசுத் தலைவர் தேர்தல் சின்னமான சங்கையும் திருடிக்கொண்டு தனிவழி கண்டன. ஆனால் யாழ்ப்பாணத்தால் அவற்றால் ஒரு ஆசனத்தைக்கூடப் பெறமுடியவில்லை. சுயேச்சையாகப் போட்டியிட்ட மருத்துவர் அருச்சுனாவின் வாக்குகளைக்கூடப் பெறமுடியவில்லை.

கடந்த முறை ஈபிஆர்எல்எவ், அருந்தவபாலன்உள்ளிட்டபலதரப்புக்களுடன் சேர்ந்து கூட்டமைத்து பொதுத் தேர்தலில் தனியொரு ஆசனத்தைப் பெற்ற தமிழ் மக்கள் கூட்டணி இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தாவி வந்த பலரையும் வேட்பாளராக்கிக்கொண்டு தனித்துப் போட்டியிட்டு மண் கவ்வியது.

இப்படித் தேர்தலில் படுதோல்வியடைந்த இந்தக் கட்சிகள் மற்றும் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து ஓடிப்போன தனிநபர்கள் அனைவரும்சேர்ந்துகொண்டுமீண்டும்தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஉருவாக்கப்படவேண்டும் என்றுபேசத்தொடங்கியுள்ளனர். சுமந்திரனின் தேர்தல்தோல்வி இவர்களுக்கு இது தொடர்பில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடும் என்று நம்பிவிடுமாம் என்பதைப் போன்றுதான் இருக்கிறது இவர்களின் செயற்பாடு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தனிப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக் கட்சிக்கு எதிராக தாங்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கோசத்துடன் களத்தில் குதித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மட்டும் ஒரு ஆசனத்தைப் பெற்றது. வக்கு கிழக்கில் 5 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்ட அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒரு ஆசனத்தைப் பெற்றது. இவை தவிர இந்தத் தேர்தலில் போட்டியிட்ட நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈபிடிபி, அகில இலங்கை தமிழர் மகாசபை, ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனும் எந்தவொரு ஆசனத்தையும் பெறவில்லை.

அதேநேரம், சுயேச்சைக் குழு 17இல் போட்டியிட்ட மருத்துவர் அருச்சுனா யாழ். தேர்தல் மாவட்டத்தில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார். வடக்கு கிழக்கில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், கஜேந்திரன், டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன், பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன், சித்தார்த்தன் ஆகியோர் தோல்வியடைந்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான விக்னேஸ்வரன் இந்தத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கினார். கிழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் போட்டியிடமுடியாத நிலை ஏற்பட்டது.

இப்படிப் தமிழ் அரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட அரசியல் தலைவர்களும் அரசியல் கட்சிகளும் படுதோல்வியைத் சந்தித்த நிலையிலும் கடும் எதிர்ப்புக்கள், வசைபாடல்களுக்கு மத்தியில் தனித்துப் போட்டியிடுவது என்கிற துணிச்சலான முடிவை எடுத்த தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் தனிப் பெரும் கட்சியாகப் பேரெழுச்சி பெற்றுள்ளது.

இது தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் தோல்வியுற்ற நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்ததாவது:

இந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டது எல்லலோருக்கும் தெரியும். தமிழ் அரசுக் கட்சியோடு இணைந்து வெவ்வேறு கட்சிகள் கூட்டுச் சேர்வதும் பின்னர் விலகிச் செல்வதும் கடந்த காலங்களில் வழக்கமாக இருந்திருக்கின்றது.

இந்தத் தேர்தலுக்கு முன்னர் எங்களோடு கூட்டுச் சேர்ந்திருந்த ரெலோவும் புளொட்டும் விலகின. புதிதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்று குத்துவிளக்குச் சின்னத்திலே பயணித்தன. 2024 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சங்கை சின்னத்திற்கு மாற்றின.

ஆகையினால் தமிழரசுக் கட்சி தனித்து மக்கள் முன்பாக ஆணைக்காகச் செல்லும் நிலை ஏற்பட்டது. பலரும் இதை எதிர்த்தனர். விமர்சனங்கள் இருந்தன. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்துவிட்டது, தமிழ் அரசுக் கட்சி சின்னாபின்னமாகிவிட்டது, சுக்குநூறாகிவிட்டது, இதனால் வெற்றிபெற முடியாது என்றவாறாக இந்தத் தேர்தல் காலத்தில்கூட சொல்லப்பட்டது.

எங்களுடைய கட்சியில் இருந்தும் சிலர் விலகிச்சென்றுவேறுகட்சிகளிலும், சுயேச்சைக் குழுக்களிலும் போட்டியிட்டிருக்கின்றார்கள். ஆனால், இந்தத் தேர்தல் முடிவு எங்களுடைய கட்சிக்குப் பலமான மக்கள் ஆணையைக் கொடுத்திருக்கின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பத்து ஆசனங்கள் இருந்தன. ஆனால் அதில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஆறு ஆசனங்களே இருந்தன. இப்போது தனித்துப் போட்டியிடுகின்றபோது எங்களுக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. எங்களை விட்டு விலகி தனித்துச் சென்றவர்களுக்கு எந்தவிதமான ஆணையையும் கொடுக்காமல் தமிழ் அரசுக் கட்சிக்கு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமது ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காகத் தமிழ் அரசுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்தத் தேர்தல் பரப்புரை காலத்திலே நாங்கள் தெளிவாக ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தோம். அதாவது இணைந்த வடக்கு - கிழக்கு எங்களது தாயகம், அதிலே எங்களுக்கு சுயநிர்ணய உரித்து உண்டு. நாங்கள் ஒரு மக்களாக - ஒரு தேசமாக அதிலே வாழுகின்றோம் என்பதை உறுதி செய்வதற்காக வடக்கு- கிழக்கு முழுவதும் ஒரே கட்சிப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும் என மக்களிடம் கேட்டிருந்தோம்.

தமிழரசுக் கட்சி தவிர்ந்த வேறு எந்தக் கட்சிகளுக்கும்அப்படிவடக்குகிழக்குமுழுவதும் தேர்தலில் போட்டியிடும் ஆற்றல்கூட இல்லை என்பதையும் மக்களுக்குத் தெளிவாகச் சொல்லியிருந்தோம். இன்று வெளியாகி இருக்கின்ற தேர்தல் முடிவுகளிலே அது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் இருந்து மக்கள் எமது கட்சி பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளனர். இதில் மட்டக்களப்பில் விசேடமாக மூன்று ஆசனங்களைப் பெற்றுள்ளோம். மற்றைய மாவட்டங்களில் ஒவ்வொரு ஆசனத்தைப் பெற்றுள்ளோம். யாழ்ப்பாணம் ஒரேயொரு ஆசனத்தைதே பெற்றிருக்கின்றோம். இது எங்களது கட்சிக்குத் தோல்வி என்பதை ஒப்புக்கொள்கின்றோம். ஆனாலும் கட்சியாக வடக்கு கிழக்கில் தமிழ் அரசு எழுச்சி பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது - என்றார்.

## தேசிய மக்கள் சக்திக்கு

# யாழ். மக்கள் தந்த வெற்றி ஒற்றுமையின் வெளிப்பாடு

### முன்னாள் அமைச்சர் அலி சப்ரி கருத்து

தமிழ்க் கட்சிகள் தனித்துப் போட்டியிட்ட பொதுத் தேர்தலில் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாண மக்கள் தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்ட தேசியக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். இந்தத் தருணம் தேர்தல் முடிவுகளில் மாத்திரமின்றி, முழுநாட்டினதும்ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தனது 'எக்ஸ்' பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தனிப்பட்ட வேறுபாடுகளைவிட உண்மையான வேறுபாடுகள் எப்போதுமே அரசியல்சார்ந்தவை என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் எமக்கு நினைவூட்டுகின்றன.

இந்த மாற்றமானது மக்கள் பிளவுகளுக்கு அப்பால் செல்லத் தயாராக இருக்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. ஒன்றாக, நீடித்த நம்பிக்கையைஉருவாக்கவும்உண்மையான நல்லிணக்கத்தை அடையவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்தப் புதிய ஐக்கியத்தில் இலங்கை செழிக்கட்டும். அனைத்து இலங்கையர்களின் நலனுக்காகவும் தேசிய மக்கள் சக்தியினரும் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவும் சேவையாற்றுவர் என்று நம்புகின்றோம் - என்று தெரிவித்துள்ளார்.

## அநுரவுக்கு இந்தியா உடனடி வாழ்த்து



நாடாளுமன்றத்தேர்தலில்அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்கவின் தேசிய மக்கள் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுப் பெரு வெற்றி பெற்றதற்கு இந்தியா உடனடியாகவே வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்து முதன்முதலாக வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. சக ஜனநாயக நாடாக, இந்தியா இந்த ஆணையை வரவேற்கிறது என்று உயர்ஆயைர் தெரிவித்தார். மக்களின் நலனுக்காக இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளது என இந்திய உயர்ஆணையகம் தெரிவித்துள்ளது.

## மறுமலர்ச்சி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கதோள்கொடுத்தஅனைவருக்கும் நன்றி" எனத் தெரிவித்திருந்தார்.

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுள்ளது. அரசுத் தலைவர் அநுரகுமார தனது தேர்தல் அறிக்கையில் முன்வைத்த புதிய அரசமைப்பு உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆணையை மக்கள் அவருக்கு வழங்கியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பெரும்வெற்றிகள் கொண்டுவரும் ஆபத்துக்கள் ஜனாதிபதி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்

## சாலிய பீரிஸ் 'அட்வைஸ்'

பெரும்வெற்றிகள் கொண்டு வரும் ஆபத்துக்கள்குறித்து ஜனாதிபதி எச்சரிக்கையுடன்இருக்கவேண்டும்என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைபெறும்நிலையில் உள்ளது என்பது புலனாகின்றது அல்லது அந்த கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மிக அருகில் நெருங்கிச்செல்லலாம்.

தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டுபெரும்பான்மையைபெற்றால் விகிதாச்சார பிரதிநிதித்து முறையின் கீழ் ஒரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றமை இதுவே முதல்தடவை.

2010 இல் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மூன்றில் இரண்டை நோக்கி நெருங்கிச்சென்றது, 2020 இல் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவும் மூன்றில்இரண்டைநெருங்கிச்சென்றது மூன்றில் இரண்டை பெறுவதற்கு சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெறவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

1994 இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட வெற்றியை மாத்திரம் இந்த வெற்றியுடன் சமாந்திரம் வரையமுடியும்.

தேசியமக்கள்சக்திவடக்குகிழக்கில்குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெற்றுள்ளதால் இலங்கையின் பல்வேறுசமூகங்களைஐக்கியப்படுத்தும்தலைவராக ஜனாதிபதி விளங்க முடியும்.

இந்தத் தேர்தல் வெற்றி நிறைவேற்றதிகார முறையை நீக்குவேன் என்ற தனது வாக்குறுதியை ஜனாதிபதி விரைவில் நீக்குவதற்கு உதவும்.

ஜனாதிபதியாக அனுரகுமார திசநாயக்க தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நாடு சென்றுகொண் டிருக்கின்ற பாதை குறித்து அநேக இலங்கையர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர், குறிப்பாக அரசியல் கலாசாரத்தின் மாற்றம் குறித்து மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்பதற்கு சான்றாக இந்த வெற்றி காணப்படுகின்றது.

எனினும் பெரும்வெற்றிகளுடன் வரும் ஆபத்துக்கள்குறித்து ஜனாதிபதி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

ஜனாதிபதியே நேற்று தெரிவித்தது போன்று அரசியல் சக்திகள் கடந்த காலங்களில் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறுவதற்கான சட்டங்களை இயற்றுவதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மைகளை பயன்படுத்தியிருந்தன.

ஜனநாயக உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை சிதைக்கும் சட்டங்களை இயற்றுவதற்கான உந்துதல்களைதேசியமக்கள்சக்திதவிர்க்கவேண்டும். (05)

# எல்லைகள் அனைத்தையுமே உடைத்த தேர்தல் வாக்களிப்பு

## கிரிக்கெட் வர்ணனையாளர் ரொசான் அபயசிங்க தெரிவிப்பு



2024 நாடாளுமன்ற தேர்தல் வாக்களிப்பை இனம் மதம் என வாக்காளரை சிறையில் அடைத்த எல்லைக்குள் கட்டுப்படாத வாக்களிப்பு என வர்ணித்துள்ள கிரிக்கெட் வர்ணணையாளர் ரொசான் அபயசிங்க நகரங்கள் கிராமங்கள் மாவட்டங்கள் மாகாணங்கள் அனைத்தும் ஒரே குரலில் பேசியுள்ளன என குறிப்பிட்டுள்ளார்

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது -

2019இல் அப்போதைய அரசாங்கத்தின் வெற்றி மிகப்பெரியது என பாராட்டப்பட்டது.

ஆனால் அந்த வெற்றியில் ஒரு முக்கியமான விடயமிருந்தது, அதாவது மக்கள் வாக்களித்த விதத்தில் வடக்கும் கிழக்கும் மலையகமும் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித் திருந்தன. அதன் மூலம் அவர்கள் தென்பகுதி தலைமைத்துவத்தை நம்பவில்லை என்பதை மீண்டும் வெளிப்படுத்தினார்கள்.

2024 தேர்தல் முடிவு மகத்தானது மாத்திரமில்லை இது ஒரு சுனாமி.மேலும் வாக்களிப்பு இடம்பெற்ற விதம்தான் இதற்கு மகுடம் போல காணப்படுகின்றது.

இனம் மதம் என வாக்காளரை சிறையில் அடைத்த எல்லைக்குள் கட்டுப்படாத வாக்களிப்பு இது.

நகரங்கள், கிராமங்கள், மாவட்டங்கள், மாகா ணங்கள் அனைத்தும் ஒரே குரலில் பேசியுள்ளன.

இது இயற்கையாகவே நாட்டிற்கு சிறந்த விடயம்.

இலங்கை அதன் அரசியல் அத்தியாயத்தில் ஒரு புதியபக்கத்திற்குள்நுழைகின்றது. உறுதியளிக்கப்பட்ட மாற்றத்திற்காகக் காத்திருக்கின்றது. (05)

# முள்ளிவாய்க்காலில் உடனே அஞ்சலி செலுத்திய ரவிகரன்



நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றதுரைராசரவிகரன்நேற்று (வெள்ளிக்கிழமை) முள்ளிவாய்க்கால் நினைவு தூபிக்கு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.




வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பாகபோட்டியிட்டுமக்களின்அமோக ஆதரவுடன்வெற்றிபெற்றுள்ள துரைராச ரவிகரன் நேற்று காலை 11.15 மணியளவில் இறுதிப்போரில் உயிரிழந்த மக்கள் நினைவாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு சென்று போரில் உயிரிழந்த மக்களுக்காக வணக்கம் செலுத்தியிருந்தார்.

வெற்றிவாகை சூடிய நாடாளுமன்ற உறுப்பினரை முல்லைத்தீவு மக்கள் நேற்று முல்லைத்தீவு நகரில் மாலை அணிவித்து வரவேற்ற துடன் வெடிகொளுத்தி வெற்றி கொண் டாடட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)



# சாகலவும் – ரஞ்சனும் தேர்தலில் படுதோல்வி!



முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகலரத்நாயக்க பொதுத்தேர்தலில் தோல்வி யடைந்துள்ளார்.

இதேபோன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, திலீத் ஜெயவீர ஆகியோரும் தோல்வியடைந்துள்ளனர். (05)

# யானை மீது மோதியதில் தடம்புரண்ட தொடருந்து

வவுனியா, செட்டிக்குளம் பிரதேசத்தில் தொடருந்து ஒன்று யானைமீதுமோதிதடம்புரண்டுள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து தலைமன்னார் நோக்கிப் பயணித்த தொடருந்து ஒன்றே இவ்வாறு தடம்புரண்டுள்ளது.

இதன் காரணமாக கோட்டை - தலைமன்னார் ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, தொடருந்து ஊழியர்கள் இணைந்து தடம்புரண்ட ரயிலைச் சீர்செய்துள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பெரும் பொறுப்பு

பத்தாவது நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் 159 ஆசனங்களைப் பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ளது தேசிய மக்கள் சக்தி. 2020 நாடாளுமன்றத்தில்வெறும்3ஆசனங்களைமட்டுமேகொண்டிருந்த ஒரு கட்சி தற்போது 159 ஆசனங்களைப் பெற்றிருப்ப–து என்பது வெற்றி மட்டுமல்ல பெரும் பொறுப்பும்கூட.

இலங்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் ஒரு கட்சி அல்லது கூட்டணி மூ–ன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கைப்பற்றிய முதல் சந்தர்ப்பம் இதுவாகும். 2010இல் மகிந்த ராஜபக்சவின் ஆளும் தரப்பும் 2020இல் கோட்டாபய தலைமையிலான பொது ஜன பெரமுன ஆளும்தரப்பும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருந்தபோதும் அதைத் தனி ஒரு கட்சியாக வென்றிருக்கவில்லை. வேறு கட்சிகளில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியே அந்தப் பெரும்பான்மையைப் பெற முடிந்தது. ஆனால் வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைத் தேர்தல் மூலம் வென்றுள்ளது.

இந்த மகத்தான் வெற்றியை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய இலங்கை மக்களுக்கு ஒரு பெரும் எதிர்பார்ப்பு உண்டு. 70 ஆண்டுகளாக இந்த நாட்டைச் சீரழித்த அரசியல் தலைமைகளை உதறித்தள்ளி புதிய நாட்டை உருவாக்கும் அவர்களின் கனவை அவர்கள் இப்போது தேசிய மக்கள் சக்தியின் தோள்களில் இறக்கி வைத்திருக்கிறார்கள். அதனை முழுமையாகப் பூர்த்தி செய்வேண்டிய பெரும் பொறுப்பு இப்போது அரசுத் தலைவர் அநுரவிடமும் தேசிய மக்கள் சக்தியிடமுமே இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் இந்தத் தடவை தேசிய மக்கள் சக்தியை வடக்கிலும்கிழக்கிலும்இருக்கக்கூடியதமிழ், முஸ்லிம்சமூகங்களும் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆதரித்துள்ளன. இந்தச் சமூகங்களின், இனங்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இலங்கையைப் புதியதாகக் கட்டியெழுப்புவது என்பது நடக்கக்கூடிய காரியமல்ல. எனவே அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் வகையில் ஓர் அரசியல் தீர்வை வழங்கவேண்டிய பெரும் பொறுப்பும் தேசிய மக்கள் சக்திக்கு உண்டு. அதைச் செய்வோம் என்று சிங்கள மக்களிடம் வாக்குறுதி வழங்கி அதற்கான ஆணையையும் தற்போது பெற்றுள்ளது தேசிய மக்கள் சக்தி.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்கிற உச்ச அதிகாரம் கடந்த காலங்களில் மக்களின் ஜனநாயக உரிமைகளைநசுக்கும், ஆட்சியாளர்களின்தான்தோன்றித்தனமான செயல்களை நியாயயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்பட்டன என்பதை இலங்கை சட்டவாளர்கள் சங்க முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் நினைவுபடுத்தியுள்ளார். இலங்கையை மக்கள் வாழக்கூடிய சிறந்த நாடாக்கவேண்டும் என்கிற அவாவோடு கடந்த சில தேர்தல்களாகவே மக்கள் ஒரு தரப்பை ஆதரித்து அதீதமாக வாக்களித்து வந்துள்ளதைக் காணமுடிகிறது. அப்படித்தான் 69 லட்சம் பேர் கோட்டாபயவை ஆதரித்து வாக்களித்தார்கள். அதேநேரம் அவர் மக்களின் ஆணைக்கு எதிராக நடந்தபோது அவரை விரட்டியடிக்கவும் அவர்கள் தயங்கவில்லை.

அதனடிப்படையில் பார்த்தால் இப்போது தேசிய மக்கள் சக்திக்கு அவர்கள் வழங்கியிருக்கும் ஆணையை சரியாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் பொறுப்பையும் புரிந்துகொள்ள முடியும். அரசுத் தலைவர் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தமது கட்சி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்று ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். தேவையானால் மக்களிடம் கருத்தறியும் வாக்கெடுப்புக்களையும் நடத்தத் தாம் தயங்கமாட்டோம் என்றும் தெரிவித்துள்ளார். அரசமைப்பு மாற்றம் குறித்தே அவர் அத்தகைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்று எதிர்பார்க்கலாம்.

பொருளாதார மறுசீரமைப்பு, புதிய அரசமைப்பு உருவாக்கம், இலஞ்ச ஊழல் ஒழிப்பு, தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்று தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றவேண்டிய பெரும்பொறுப்பே இந்த மிகப் பெரும் வெற்றி என்பதை உணர்ந்து ஆளும் தரப்பினர் செயற்படவேண்டும். இல்லையேல் எப்படி 145 ஆசனங்களில் இருந்து மூன்று ஆசனங்களுக்கு பொது ஜன பெரமுனவை உருட்டிச் சரித்து விட்டார்களோ அதேபோன்று தேசிய மக்கள் சக்தியையும் தூக்கி எறிய மக்களுக்கு அதிக காலம் பிடிக்காது.

# ஜேவிபி எனும் சுனாமி

**என். சத்தியமூர்த்தி**

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்காவின் ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணி தேர்தல் அதிசயத்தை நிகழ்த்தி முடித்திருக்கிறது. ஜயவர்த்தனேவால் முன்னெடுக்கப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையிலான தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மூன்றில் இரண்டு பங்குக்கும் மேலான--- ஆசனங்களைக் கைபற்றி சரித்திரம் படைத்துள்ளது. இதனால், அரசும் அரசியலும் முற்றும் முழுவதுமாக புதிய



அத்தியாயத்தை தொடங்க இருக்கின்றன. அதுவே புதிய புத்தகமாக இருக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திசநாயக வெற்றி பெற்றதை தொடர்ந்து, அவரால் அறிவிக்கப்பட்ட தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலில், தென்னிலங்கை பகுதிகளில் அவரது கூட்டணி அறுதிப் பெரும்பான்மையை பெறும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக இருந்தது. கேள்வியே, அவர்கள் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களை பெற்று, அரசமைப்பை தங்களிஷ்டப்படிமாற்றிக்கொள்வதற்கானமக்களின் அனுமதியை பெறுவார்களா, என்பதில்தான் இருந்தது. இந்தத் தேர்தல் முடிவுகளின்படி, தென்னிலங்கை என்று மட்டுமல்ல, அனைத்து இலங்கையிலும் அவர்களே முன்னிலை வகிக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், தமிழர்களின் மட்டகளப்புமாவட்டத்தைதவிர, ஏனைய21தேர்தல் மாவட்டங்களிலும் ஜேவிபி-ன் சுனாமி அலையின் வீச்சும் தாக்கமும், பிற கட்சிகள் அனைத்தின் அடி நாதத்தையுமே பிரித்துப்போட்டுவிட்டது. ஆனால், மட்டகளப்பில் தமிழ் அரசுக் கட்சி மொத்தமுள்ள ஐந்து ஆசனங்களில் மூன்றைக் கைப்பற்றியுள்ளது. தமிழ் அரசுக் கட்சியும் ஜேவிபியும் தலா ஒரு ஆசனத்தை பெற்றுள்ளார்கள். இந்த சுனாதி தாக்குதலுக்கு பின்னர், தங்களது எதிர்காலத்தை தமிழ் தரப்பினர் எப்போது, எப்படி ஒன்று சேர்த்து, மீள்கட்டி எழுப்பி, ஏதோ ஒரு வடிவத்தில் திருத்தி அமைக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

ஆனால், இந்த இரண்டு தேர்தலுக்கு பின்னர் கிழடு தட்டிய ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திர கட்சியும் அவர்களை எதிர்பதற்கு பிறந்த ராஜபக்சாக்களின் பொதுஜன பெரமுன போன்ற கட்சிகள் மட்டுமல்லாமல், அவற்றை சார்ந்திருந்த அனைத்து தலைவர்களுமே காணாமல் போய்வி;ட்டார்கள். அவர்களில் யாரும் அடுத்தமுறை வரை அரசியிலில் இருப்பார்களா என்பதே சந்தேகம். அந்தக் கட்சிகளின் எதிர்காலமே இல்லை என்றே ஆகிவிட்டது.

### வறட்டு கௌரவத்திற்கு வாய்க்கால்

இதேசந்தேகம்தமிழர்அரசியல்மற்றும்அரசியல் தலைவர்களுக்கும் பொருந்தும். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியம் என்ற போர்வையில் தலைமுறையான யாழ்பாணத்தானின் வறட்டு கௌரவத்திற்கு தொடர்ந்து வடிகால் அமைத்துக் கொண்டு அரசியல் செய்தவர்கள் அனைவருமே இப்போது காணாமல் போய்விட்டார்கள். அதற்காக, வெற்றிபெற்றவர்களில் ஒரு சிலருக்காவது அந்த வறட்டு கௌரவம் இல்லையா என்று கேட்டால், அதற்கான விடை எதிர்மறையாகவே இருக்கும். பெயர் சொல்லி கூற வேண்டுமானால், சிறிரன்-சுமந்திரன் என்ற இரட்டையரின் மோதலினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

அதிலும் குறிப்பாக, மறந்துபட்ட, மறைந்துவிட்ட சம்மந்தனின் அந்திம காலம்தொட்டு, ஒன்றாக இணைந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடங்கி, அதனுள் தான் சார்ந்திருந்த தமிழ் அரசு கட்சி உள்ளிட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு பிளவுகளுக்கு ஒருபுறம் சுமந்திரனே இருந்தார். இன்னும் சொல்லப்போனால், அவரால்தான் அந்த பிளவுகள் தோன்றின என்று பலரும் நம்பினார்கள். அதுவே, அவரது தேர்தல் தோல்விக்குக் காரணம்.

அதுபோன்றே, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ் பொது வேட்பாளர் என்று அனைவரையும் ஏமாற்றி, அவர்களது சங்குச் சின்னத்தை கபளீகரம் செய்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினருக்கும் மக்கள் தக்க பாடம் புகட்டி உள்ளார்கள். தமிழ் அரசுக் கட்சி மற்றும் கூட்டணியின் வேட்பாளர்களாக யாழ்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் வெற்றிபெற்றுள்ள சிறிதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தங்களுக்கு என்று ஒரு வாக்குவங்கியைப் பெற்றிருந்தார்கள். அதனால்தான் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

அதிலும் குறிப்பாகச் செல்வத்திற்காக மன்னார் கத்தோலிக்க திருசபை சில -பல வேலைகளைச் செய்தது என்பது சமூக ஊடகச் செய்தியானது. அதனை யாரும் மறுக்கவில்லை. ஆனால், இதே முன்னெடுப்பு, சுமந்திரனுக்காக யாழ்பாணத்தில் செய்யப்படாதது வரவேற்கப்படவேண்டிய விடயம். காரணம், அவ்வாறான முன்னெடுப்புகளே, தமிழர்கள் மத்தியில் மதப் பிரிவினையைத் தூண்டி இருக்கும்.

இப்போதே, இந்து மதத்தின் பெயராலும், சைவ சமயத்தின் பெயராலும், அரசியல் செய்பவர்கள் யாழ்பாணத்தில் இருக்கிறார்கள். அவர்களில் மறவன்பிலவு சச்சதிதானந்தம், சுமந்திரனை மத அடையாளத்தை காட்டும் 'ஆப்பிரகாம்' என்ற முதற்பெயரோடு சேர்த்தே குறிப்பிட்டுப் பேசுவார். அவர் சார்ந்த மத அடையாளத்தோடு, யாழ்பாண மாவட்டத்தில் மூன்று சுயாதீன குழுக்கள் களமிறங்கி இருந்ததாகச் செய்திகள் தெரிவித்தன. அவர்களில் யாரும்கூடத் தேர்ச்சி பெறவில்லை என்பதும் வரவேற்கதக்கது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ஜேவிபி எனும் சுனாமி

4ம் பக்கதொடர்ச்சி ...........

**உன்னாலே நான் கெட்டேன்**

இப்போதாவது, 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்' என்று கூட்டாக ஒப்பாரி வைத்துவிட்டு, அனைத்து தமிழ் கட்சிகளும் மீண்டும் ஏதோ ஒரு மையபுள்ளியில் இணைய முயற்சிக்கப் போகிறார்களா? அல்லது, விட்ட இடத்தில் இருந்து தமிழ் அரசு கட்சியின் உள்கட்சி பூசலை மையப்படுத்தி அரசியல் செய்யப்போகிறார்களா?

ஒரு கட்டத்திற்குப் பின்னர், நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில்கூட சிறிதரன் தனியாவர்த்தனம் வாசித்து, சுமந்திரனை தாக்கி வந்தது கண்கூடு. அவரது கிளிநொச்சியை விட்டு தள்ளுங்கள், வடமராச்சி பத்திரிகையாளர் சங்கத்தில் பேசும்போது கூட அவர், தான் சுமந்திரனை தோற்கடித்து பெற்ற கட்சித் தலைவர் பதவி இந்த தேர்தல் மூலம் தனக்குத் திரும்பக் கிடைக்கும் என்று கூறினார்.

ஆனால், தற்போது, முதல் முறையாக, தமிழ் அரசுக் கட்சி அரசியலின் மையப் பகுதியாக கிழக்கு மாகாணம் மாறிவிட்டது. வடக்கில் இருந்து இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றால், கிழக்கில் இருந்து மீதமுள்ள ஐந்து பேர். இன்னமும் கட்சியின் மத்திய குழுவில் சுமந்திரனின் ஆதரவாளர்களே முன்னிலை வகிக்கிறார்கள். அவரது ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்ட திருகோணமலை நீதிமன்றத்தில் உள்ள வழக்கு முடியும்வரை, சிறிதரனின் தலைமை கட்சிக்குக் கிடைக்கும் என்று தோன்றவில்லை.

இந்தப் பின்னணியில், கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவின் நிலைப்பாடு முக்கியமானதாகும். தான் அந்தப் பதவியில் இல்லை என்று அறிவித்துவிட்டு, தற்போது, கட்சிக்கு கிடைக்கும் சாத்தியமுள்ள தேசிய பட்டியல் ஆசனத்தை அவரே கபளீகரம் செய்து, சிறிதரன் ஆதரவு நிலையை எடுக்கப்போகிறாரா, அல்லது பல்வேறு பிரிவினரையும் ஒன்று சேர்த்து. மற்றொரு சம்மந்தனாக உருவெடுக்க முயற்சிப்பாரா?

**இல்லாமை, இயலாமை**

எது எப்படியோ, ஆளும் ஜேவிபி கூட்டணியினரைப் பொறுத்தவரை, அவர்கள் கேட்காமலே கிடைத்த தமிழர் பகுதி ஆசனங்கள், அவர்களது எதிர்காலத்தை மட்டுமல்ல, தமிழ் தேசியம் என்று பகடிகூறி தங்களது சொந்த அரசியலை மக்கள் அரசியலாக மாற்ற முயன்று தொடர்ந்து தோற்றுப்போன தமிழ் அரசியல்தலைவர்களின் எதிர்காலத்தையும் மாற்றவல்லது. அதிலும் குறிப்பாக, தமிழ் தேசியத்தின் எதிர்காலம் குறித்து, உள்நாட்டு தமிழ் மக்கள், புலம்பெயர்ந்தோருக்கு விடுத்த செய்தியாகவும் இதனைப் பார்க்கவேண்டும்.



காரணம், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு புலம்பெயர்ந்தோர் குழுக்களும் அணிகளும் இங்குள்ளவர்களை உசுப்பிவிட்டு அதில் குளிர்காய நினைத்ததில்தான் தமிழர்களின் தற்போதைய தாழ்வுகளுக்கும் வீழ்ச்சிகளுக்குமான அடித்தளம் அமைக்கப்பட்டது. என்ன, அவர்களும் இங்குள்ளவர்களின் வறட்டு கௌரவத்தையும், சிங்களவர்களுக்கு எதிரான மனநிலையை ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக, தண்ணீர்விட்டு, உரம் போட்டு வளர்த்து விட்டவர்கள்தானே!

இந்தத் தேர்தலுக்குப் பின்னர், அரசியல் தீர்வு குறித்த அநுர அரசின் முன்னெடுப்புகளும் முடிவுகளும் கூர்மையாகக் கவனிக்கப்படும். ஆனால். அதனைப் புலம்பித் தீர்ப்பது தவிர யாழ்பாணத்தார் செய்வதற்கு ஒன்றும் இராது. அதேசமயம், இந்த அரசு, இனப்போர் முடிந்த காலகட்டத்தில், ராஜபக்ச அரசு முன்னெடுத்தது போல், வளர்ச்சி, வேலைவாய்ப்பு என்ற திசைகளில் பயணித்தால், அது தமிழ் தேசியம் பேசும் அரசியல்வாதிகளைக் காணாமலே ஆக்கிவிடும் வாய்ப்பு உள்ளது.

இனிவரும் காரங்களில், 'தமிழ் தேசியமாவது, வெண்டைக்காயாவது' என்று தென்னிலங்கையில் குரல் ஒலித்தால், அது தற்போதைய தமிழர் பகுதி தேர்தலின் எதிரொலிதான் என்று நம்மவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இதுவரை, இவ்வாறு யாழ்பாண தேர்தல் மாவட்டத்திலேயே ஒரு தென்னிலங்கை கட்சிக்கு, மொத்தமுள்ள ஆறில் மூன்று ஆசனங்கள் கிடைக்கும் என்பதை இரு தரப்பினருமே கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். அதிலும் குறிப்பாக, இதுவரை வட மாகாண அரசியல் குறித்து நேரடி அறிவோ அல்லது தேர்தல் அனுபவமோ இல்லாத ஜேவிபி, இவ்வாறான வெற்றியைப் பெறுமென்றால், தமிழர்களின் இல்லாமையை, இயலாமையை எப்படி விவரிப்பது?

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு, இந்தியாவின் அயலுறவு அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கரும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலும் தனித்தனியாக கொழும்பு வந்திருந்தார்கள். அப்போது, தமிழர் அரசியல் தலைமைகளை ஒரு சேர சந்தித்த இருவரும், அவர்களிடம் கூறியது எல்லாம், தமிழர் தரப்புகள் அனைத்தும் ஒன்றாக அரசியல் செய்து ஒன்றாக தேர்தல்களை சந்தித்தால் மட்டுமே, அரசியல் தீர்வு உள்ளிட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுதான்.

அன்று அவர்கள் இருவரையும், ஏன், இந்தியாவையும் இந்திய அரசையும் ஏகாட்டியம் செய்தவர்கள் தற்போது உள்நாட்டிலேயே கேலிப்பொருள் ஆகி இருக்கிறார்கள். இனி, இந்தியா என்ன, அமெரிக்கா என்ன, சர்வ வல்லைமை பொருந்திய ஆண்டவனே அநுராவிடம் கோரிக்கையை முன்வைத்தாலும், அவர் கொடுப்பதுதான் அரசியல் தீர்வு.

இனி, வேறென்ன... 'மீண்டும் பிழைவிட்டோம் தனே' என்ற பழைய பல்லவியை, பழகிப்போன பல்லவியை தமிழர்கள் பாடிக்கொண்டு இருக்கலாம். இந்தமுறை தொடங்கி, அதனைப் பாடிக்கொண்டே இருக்கலாம்.




# தாய்லாந்து பெண் கட்டுநாயக்கவில் போதைப் பொருளுடன் கைதானார்

## ரூ. 18 கோடி பெறுமதி



*18 கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்களுடன் தாய்லாந்து பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.*

*37 வயதுடைய தாய்லாந்து பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபர் தாய்லாந்தின் பேங்கொக் நகரத்திலிருந்து வியாழக்;கிழமை இரவு 11.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.*

*பின்னர் சந்தேக நபர் பசுமை சேனல் வழியாக விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.*

*இதன்போது சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 22 கிலோ நிறையுடைய குஷ் மற்றும் ஹாஷ் ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபர் நேற்று (வெள்ளிக்கிழமை) நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (05)*

# நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ரவிகரனுக்கு முல்லையில் பெரு வரவேற்பு



இலங்கை தமிழ் அரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வன்னித் தேர்தல் தொகுதியில் வெற்றியீட்டிய துரைராசா ரவிகரனை வரவேற்கும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) முல்லைத்தீவு நகரில் நடைபெற்றுள்ளது.

வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வன்னித்தேர்தல் தொகுதியில் இலங்கை தமிழரசுக்கட்சி சார்பாக போட்டியிட்டு மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றிவாகை சூடிய வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனை முல்லைத்தீவு மக்கள் அனைவரும் அணிதிரண்டு வரவேற்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு நகர் பகுதியில் நடைபெற்றிருந்தது.

நேற்று காலை 10 மணியளவில் ஆரம்பமாகிய குறித்த நிகழ்வில் மக்களால் வெற்றியீட்டிய வேட்பாளருக்கு மாலை அணிவித்து வரவேற்று குறித்த வெற்றிக் கொண்டாட்டம் ஆரம்பமாகியிருந்தது.

குறித்த வெற்றி வரவேற்பு நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாத்தறையில் அதிக விருப்பு வாக்கு பெற்றார் சுனில் ஹந்துன்நெத்தி



நாடாளுமன்ற தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சி ஆறு ஆசனங்களை பெற்றுள்ளதுடன், சுனில் ஹந்துநெத்தி மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சி பெற்றுள்ள விருப்பு வாக்குகள்

சுனில் ஹந்துன்நெத்தி: 249,251

சரோஜ்போல்ராஜ்: 148, 379

எல்.எம். அபேவிக்ரம: 68,144

அக்ரம் இலியாஸ்: 53,835

ஜி. அஜம்தா: 48,820

லால் பிரேமநாத்: 48, 797

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட சத்துர கலப்பத்தி 31,196 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# அமைதியான மற்றும் ஜனநாயக ரீதியிலான நாடாளுமன்றத் தேர்தலுக்காக வாழ்த்துக்கள்

## ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு



அமைதியான மற்றும் ஜனநாயக ரீதியிலான பாராளுமன்றத் தேர்தலுக்கு இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமடா வாழ்த்து தெரிவித்துள்ளது.

ஜனநாயக ரீதியாகவும் ஒற்றுமையாகவும் நாடாளுமன்றத் தேர்தலில் ஈடுபட்ட இலங்கை மக்களுக்குத் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய அத்தியாயமாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்தவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பங்களிப்பை வழங்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# மஹிந்தவின் சாதனையை முறியடித்த பிரதமர் ஹரிணி



கொழும்பு தேர்தல் தொகுதியில் தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விருப்பு வாக்குப் பட்டியலில் 655,289 வாக்குகளைப் பெற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் சாதனையை முறியடித்துள்ளார்.

விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் தேர்தல் வரலாற்றில் நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர் ஒருவர் விருப்பு வாக்குகளில் பெற்றுக் கொண்ட அதிகூடிய வாக்குகளாக பிரதமரின் விருப்பு வாக்குகள் காணப்படுகின்றன.

2020ஆம்ஆண்டுநடைபெற்றபொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 527,364 வாக்குகளைப்பெற்று அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்றவராக கருதப்பட்டார்.

விருப்புவாக்குப்பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொண்ட அதிகூடிய வாக்குகளை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய முறியடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார்.(05)

# பத்தாவது நாடாளுமன்றத்திற்கு தேர்தல் மூலம் 19 முஸ்லிம்கள்

(சியாஜ்)

நடைபெற்று முடிந்த பத்தாவது நாடாளுமன்றத்த தேர்தலில் நாடு முழுவதிலும் இருந்து 19 முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக தேசிய பட்டியல் ஊடாக எத்தனை முஸ்லிம்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் என்ற விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

இதன்படி தேசிய மக்கள் சக்தியில் கொழும்பு மாவட்டத்தில் றிஸ்வி, கண்டி மாவட்டத்தில் றியாஸ் மற்றும் சஹீப், கம்பஹா மாவட்டத்தில் முனீர், மாத்தறை மாவட்டத்தில் அர்கம், குருநாகல் மாவட்டத்தில் அஸ்லம், கேகாலை மாவட்டத்தில் நசீர், அம்பாறை மாவட்டத்தில் புஹாரி மற்றும் புத்தளம் மாவட்டத்தில் பைசல் ஆகியோரும் -

ஐக்கிய மக்கள் சக்தியில் கொழும்பு மாவட்டத்தில் முஜீப் மற்றும் மரைக்கார், கண்டி மாவட்டத்தில் றவூப் ஹக்கீம், வன்னி மாவட்டத்தில் ரிஷாத் பதியுதீன், திருகோணமலை மாவட்டத்தில் இம்ரான், கேகாலை மாவட்டத்தில் கபீர் ஆகியோரும் -

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் அம்பாறை மாவட்டத்தில் உதுமான் மற்றும் ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் திகாமடுல்ல மாவட்டத்தில் அஷ்ரப் தாஹீர் ஆகியோரும் -

சுயேச்சைக் குழு ஊடாக வன்னி மாவட்டத்தில் காதர் மஸ்தான் ஆகியோர் தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# கிளிநொச்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சியின் பலபகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வினால் பெறுமதியான வயல் நிலங்கள் உள்ளிட்ட தனியார் காணிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இரவு நேரங்களில்

விவசாய காணிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என்றும் இதன் காரணமாக தங்களது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுளளது

என்றும் கவலை தெரிவித்துள்ள பொது மக்கள் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கும் பொலீஸாருக்கும்

இடையே நெருங்கிய உறவு இருப்பதால் அவர்கள் மீது பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பை தடுக்கவும், விவசாய நிலங்களை

பாதுகாக்கவும் சட்டவிரோத மணல் அகழ்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05 - 113)

# சிறிதரனுக்கு கிளிநொச்சியில் நேற்றுப் பெரும் வரவேற்பு





நான்காவது தடவையாக பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சிவஞானம் சிறீதரனுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத்தொடர்ந்து அலுவலகம் வரை கட்சி ஆதரவாளர்கள் மக்கள் சேர்ந்து நாடாளுமன்ற உறுப்பினரை வரவேற்றனர். தொடர்ந்து வரவேற்ற மக்களுடன் கட்சி அலுவலகத்தில் கலந்துரையாடலை மேற்கொண்டார். (05 - 113)



# 1,650 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான ஹெரோயின் மீட்பு

கடற்படையினரால் மேற்கு கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட ரோந்துநடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி 1650 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமென்றும், இது குறித்த மேலதிக விசாரணைகள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடற்படையினரால் இலங்கையின் மேற்கு திசையின் ஆழ்கடலில் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது, 1650 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஹெரோயினுடன் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். குறித்த சந்தேகநபர்கள் ஹெரோயின் கடத்தலுக்கு பயன்படுத்திய பல நாள் மீன்பிடிப் படகுடன் வெள்ளிக்கிழமை காலி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

காலி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்ட படகு மேலதிக சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போதே அதிலிருந்து 1650 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 66 கிலோ 840 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 18 - 34 வயதுக்கு உட்பட்ட மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் கைப்பற்றப்பட்ட படகு மற்றும் போதைப்பொருளுடன் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 17 483 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. தொடர்ந்தும் போதைப்பொருள் கடத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என கடற்படை ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (05)

# கூரிய ஆயுதத்தால் கோரமாக தாக்கப்பட்டு தந்தை கொலை; தாய் மற்றும் மகள் காயம்

காலி, தடல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்த முகமூடி அணிந்திருந்த நபரொருவர், வீட்டிலிருந்த தந்தையைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதுடன் தாயையும் மகளையும் காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

47 வயதுடைய தந்தையே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த 45 வயதுடைய தாயும் 15 வயதுடைய மகளும் சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்திக்கு எங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதுவொரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி. இந்தப் பிரதிநிதித்துவ முறைமை வந்த பிறகு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தனித்து ஒரு கட்சி எடுப்பது மிகவும் கடினமானதாக இருந்திருக்கின்றது.

உண்மையைச் சொல்லப்போனால் தேர்தல் முடிவுகளோடு எந்தக் கட்சிக்கும் இப்படியான பெரும்பான்மை கிடைத்தது இல்லை. 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வித்தியாசமான தேர்தல் முறையிலே ஆறில் ஐந்து பெரும்பான்மை ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசுக்குக் கிடைத்திருந்தது.

இனியொருபோதும் அப்படியான ஒரு பெரும்பான்மை கிடைக்கக்கூடாது என்ற அடிப்படையிலும்தான் இந்தப் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போரை முடிவிற்குக் கொண்டுவந்த கையோடு மஹிந்த ராஜபக்சகூடத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எடுத்திருக்கவில்லை.

அதற்குப் பின்னர் கட்சி மாறல்கள், கட்சித் தாவல்கள் ஊடாகத்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது. ஆனால், இந்தத் தடவை மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பதற்கும் அப்பால் சென்று 159 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கின்றது.

இது உண்மையில் வியத்தகு வெற்றி. அப்படியான வெற்றியை ஈட்டியவர்களுக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத்திலே மூன்றே மூன்று ஆசனங்களை வைத்திருந்த தேசிய மக்கள் சக்தி இந்த நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களைத் தனித்துப் பெற்றிருப்பதும் இன்னொரு சாதனைதான்.

கட்சித் தாவல்கள் நிறைந்த எங்களுடைய அரசியல் கலாசாரத்திலே அவர்கள் தெட்டத் தெளிவாக வேறு கட்சிகளில் இருந்து தங்களுடைய கட்சிக்கு யாரும் வரவேண்டாம் என்றும், தாங்கள் யாரையும் எடுக்கமாட்டோம் என்றும் சொல்லித் தனித்து இந்த வெற்றியை ஈட்டியிருக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசநாயக்க வெற்றி பெற்றதே வியப்பான விடயமாகப் பலராலும் நோக்கப்பட்டது. அதற்கு ஒருபடி மேலே சென்று இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அப்பால் மிகப் பெரியதொரு பெரும்பான்மையை அவர்கள் பெற்றிருக்கின்றார்கள் - என்றார்.

## கட்சியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

பீலவத்தையில் உள்ள ஜேவிபி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் எங்களுக்கு 159 ஆசனங்களைத் தந்ததன் மூலம் வைத்த நம்பிக்கையை ஒருபோதும் தோற்கடிக்கமாட்டோம். இலங்கையை மீட்டெடுப்பதற்கு மக்கள் தந்திருக்கும் அந்தச் சக்தியைப் பயன்படுத்துவோம்.

ஆளும் தரப்பின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சம வாய்ப்பு அரச உயர் அதிகாரிகளுக்கும் மற்றைய அதிகாரிகளுக்கும் வழங்கப்படும். ஒரு வாய்ப்பு வழங்கப்பட்ட பின்னரும் அரச கொள்கைளைச் செயற்படுத்தாத அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். 'தலையிலிருந்த மீன் அழுகத் தொடங்கிவிட்டது'.

இலங்கைக்கு முதலீடுகளை கொண்டு வருவதில் பெரும் பிரச்சினையாக இனங்காணப்பட்ட முதலீட்டாளர்களிடம் அமைச்சர்கள் கப்பம் கோரும் பிரச்சினை இன்றுடன் முடிவுக்கு வருகிறது. கப்பம் வாங்கும் அமைச்சர்கள் இனி இலங்கை அரசியலில் இருக்க மாட்டார்கள்.

இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் மேட்டுக்குடி அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தப்படும் - என்றார்.

## தேசியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இது குறித்துத் தெரிவித்ததாவது:

என்னைப் பொறுத்தவரையில் அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் கடந்த 14 வருடங்களாக நாடாளுமன்றத்தில் சேவை செய்த நான் இந்த முறை மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. மக்களுடைய தெரிவை நான் மதிக்கின்றேன், ஏற்றுக்கொள்கின்றேன். இத்தனை காலமாக எனக்கு எல்லா விதங்களிலும் உறுதுணையாக உதவிசெய்து வந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய சேவை வடக்கு- கிழக்கு மட்டுமல்லாது முழு நாட்டுக்கும் தொடர்ந்து இருக்கும். மிகவும் பொறுப்புணர்வோடு நாங்கள் எங்கள் பயணத்தை மக்களோடு சேர்ந்து முன்னெடுப்போம் என்ற வாக்குறுதியை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதிய அரசமைப்பு வரைவில் நானும் -முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்னவும் முக்கிய பங்காற்றியிருக்கின்றோம். ஆனால், அவரும் நானும் இந்த நாடாளுமன்றத்தில் இல்லை. ஆனால், அவரும் நானும் இலங்கையில்தான் இருக்கின்றோம். ஆகவே, எந்தவிதமான பங்களிப்புத் தேவைப்பட்டாலும் அப்படி தேவைப்படுகின்ற பங்களிப்பை நிச்சயமாக கொடுத்து உதவுவோம்.

தமிழ் அரசுக் கட்சிக்கான தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் தமிழ் அரசின் மத்திய செயற்குழு கூடி முடிவு எடுக்கும். அவ்வாறான சகல முடிவுகளும் எப்போதும் கட்சி முடிவாகவே எடுக்கப்படும். ஆகவே, கட்சி என்ன தீர்மானம் எடுக்கும் என்று நான் முன்கூட்டியே சொல்லமுடியாது.

எங்களது கட்சியைப் பொறுத்தவரையில் கட்சியின் முடிவே இறுதியாக இருக்கும். நான் கட்சியின் சகல முடிவுகளுக்கும் கட்டுப்பட்டவனாக இருப்பேன். ஆனால், தேசியப் பட்டியல் ஆசன விடயத்தில் நான் என்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவாக ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அதாவது மக்கள் முன்பாக வந்து தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நான் தெரிவு செய்யப்படாத சூழலில் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் செல்வதை விரும்பவில்லை என்பதைத் தெளிவாகவே சொல்லியுள்ளேன். ஆனாலும், என்னுடைய அரசியல் செயற்பாடு தொடர்ந்தும் இருக்கும்.

சிறீதரன் மிகப் பெரிய வெற்றி பெற்றிருக்கின்றார். அதிகளவான விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளார். அவர் உட்பட தமிழரசுக் கட்சியில் இம்முறை வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள்.

அவர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் - என்றார்.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் சாதனை படைத்துள்ளார். கம்பஹா மாவட்டத்தில் விருப்பு வாக்குகளில் முதலாவதாக வந்த அவர் 7 லட்சத்து 16 ஆயிரத்து 715 வாக்குகளைப் பெற்றார். அந்த மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 8 லட்சத்து 98 ஆயிரத்து 759 வாக்குகள்.

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகளாக விஜித ஹேரத்திற்கு விழுந்துள்ள வாக்குகள் பதிவாகியுள்ளன.

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இதுதெடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் முடிவுகளின் மூலம் இனங்களுக்கு இடையிலான இணக்கப்பாடு மற்றும் ஒற்றுமையைக் காணக்கூடியதாக இருக்கிறது. இது மிகச்சிறப்பான வெற்றியாகும். பதுளையில் நான் பெற்ற வாக்குகளைவிட யாழ்ப்பாணத்தில் எமக்கு கிடைத்த வெற்றியையே பெரு வெற்றியாக நான் பார்க்கிறேன். இந்தப் பெறுபேறு யாழ்ப்பாண அரசியல்வாதிகளுக்கும் சிறந்த பாடமாகும் என்றார்.

## மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் கூறப்பட்ட வாக்குறுதிகளை அநுர திசநாயக்க நிறைவேற்றவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சி அழுத்தம் கொடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் இதனை வலியுறுத்தினர். அவர்கள் அங்கு தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையிலே மக்களுக்குச் சொன்ன விடயங்களை நாங்கள் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். மக்கள் ஆணை உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பது, முக்கியமாக தேர்தல் அறிக்கையிலே தாங்கள் குறிப்பிட்ட வாக்குறுதிகளுக்காகவேதான். அதை நிறைவேற்றும்படியாகவே மக்கள் ஆணை கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் சொன்னதற்கு மக்கள் உங்களுக்கு ஆணை கொடுத்தார்கள். அதனை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பெரும்பான்மை தேவையாக இருந்த நிலையில் இப்போது அதனையும் கொடுத்திருக்கின்றார்கள். தேசிய மக்கள் சக்தியின் அடிப்படையான கொள்கைகளில் ஒன்று நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்பதுதான். மேலும் அவர்களது தேர்தல் அறிக்கையிலே தெட்டத் தெளிவாக புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்பதையும் கூறியிருக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் வெளியிட்ட அறிக்கையிலே 2015 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டுவரையான நல்லாட்சி என்று தங்களை அழைத்துக் கொண்ட ஆட்சியின் காலகட்டத்திலே செய்யப்பட்ட அரசமைப்புக்கான வரைபைப் பூர்த்தியாக்குவோம் என்று ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் பல விடயங்களும் அவர்களுடைய வாக்குறுதிகளிலே அடங்கி இருந்தன.

இந்த விடயங்களைத் துரிதமாக அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அந்த விடயங்களிலே எங்களுடைய கட்சியின் ஆதரவு கிடைக்கும். சரியான திசையில் அவர்கள் செல்வதற்கு எங்களுடைய முழுமையான ஒத்துழைப்பு இருக்கும். தான் வாக்குறுதியளித்தபடி பல விடயங்களை அடுத்த வருட ஆரம்பத்திலே செய்ய இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க கூறியிருக்கின்றார்.

அத்தோடு உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் விரைவாக நடத்தப்படவேண்டும் என்ற நீதிமன்றக் கட்டளையும் இருக்கின்றது. அதனையும் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கும் மேலாக முடக்கப்பட்டு இருக்கின்ற மாகாண சபைத் தேர்தல்களும் உடனடியாக நடத்தப்படவேண்டும். உரிய சட்டத் திருத்தத்தின் மூலமாக அது செய்யப்படலாம். சென்ற நாடாளுமன்றத்தின் இறுதி நாட்களில் அந்தச் சட்ட மூலத்தின் இறுதி வாசிப்பு நிறைவேற்றப்பட்டு வெறுமனே மூன்றாம் வாசிப்பு செய்யப்பட இருந்த நேரத்தில் அது செய்யப்படாமல் கைவிடப்பட்டது அனைவருக்கும் ஞாபகம் இருக்கும்.

ஆகையினாலே இந்தச் சிறிய சட்ட திருத்தத்தை உடனடியாகச் செய்து மாகாண சபை முறைமையை திரும்பவும் அமுல் படுத்தவேண்டும் என்ற கோரிக்கையையும் நாங்கள் முன்வைக்கின்றோம். அதற்கான வாக்குறுதிகளையும் அவர்கள் ஏற்கனவே கொடுத்தும் இருக்கின்றார்கள் - என்றனர்.

## தமிழ்த் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திசநாயக்கவுக்கும் ஆதரவாக மக்கள் திரண்டிருக்கும்பொழுது மட்டக்களப்பு மட்டும் தனித்து நிற்கின்றது. வடக்கு கிழக்கு முழுவதற்கும் இது ஒரு செய்தியாகும்.

வடக்கு கிழக்கிலே உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் பிரதிநிதித்துவம் கிடைத்த கட்சி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாத்திரம்தான். எங்களுடைய கட்சி தற்பொழுதும் இலங்கையிலேயே தமிழ் மக்களுடைய பிரதானமான கட்சிதான். நாடாளுமன்றத்திலே மூன்றாவதாக அதிகூடிய ஆசனங்களை பெற்ற கட்சி. அந்த வகையிலே தமிழ் மக்களுடைய தமிழ் தேசிய போராட்டம் தொடரும் அதில் மாற்றமில்லை.

என்னுடைய வெற்றிக்காக வாகரை கதிரவெளி தொடக்கம் துறை நீலாவணை வரைக்கும், படுவாங்கரை, எழுவாங்கரை என அனைத்துப் பகுதிகளிலும் பாடுபட்ட மக்களுக்கும் நன்றிகள்.

களவாஞ்சிகுடி வீரபத்திர ஆலயத்தின் முன்னால் நான் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தை கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் தடுத்தார்கள். அதற்குரிய பதிலடியைத் தற்போது மட்டக்களப்பு மக்கள் வழங்கி உள்ளார்கள். ஆனால் அவர்கள் எங்களுடைய எதிரிகள் அல்லர். இனி வருங்காலத்தில் தமிழரசு கட்சியினர் மாத்திரம்தான் இந்த மாவட்டத்திலேயே மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கப் போகின்றோம். அந்த வகையிலே அவர்களையும் இணைத்துக் கொண்டுதான் நாங்கள் பயணிப்போம்.

நாங்கள் எவருக்கும் எதிரானவர்கள் அல்லர். அனைவரையும் இணைத்துக்கொண்டு இந்த மாவட்டத்திற்கும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கும் சிறந்த ஒரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்போம்.

மட்டக்களப்பிலே 24 ஆண்டுகளுக்கு முன்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை எடுத்த 57 ஆயிரம் விருப்பு வாக்குகளையும் கடந்து மட்டக்களப்பு மக்கள் எனக்கு 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை வழங்கியுள்ளார்கள். இதுவும் ஒரு சாதனை - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

Orient Finance
A Janashakthi Group Company
நிறுவனத்திலிருந்து
நிலையான
வைப்புகளிற்கு
விசேட வட்டி விகிதம்.
தொடர்புகளிற்கு
0770235816 / 0774747278
No:550, Hospital Road,Jaffna

# பரம்பரை அரசியல் செய்யும் தேவை, விருப்பம் ஏதுமில்லை

## தேர்தலில் தோற்ற பின்னர் அங்கஜன் அறிவிப்பு



நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் அதேநேரத்தில், காலங்காலமாக பரம்பரை அரசியல் செய்யும் தேவையும் விருப்பமும் எனக்கில்லை என்பதோடு என்னால் எனது சொந்த விடயங்களை கவனிக்க கிடைத்த சந்தர்ப்பமாகவும் இதனை எடுத்துக் கொள்கிறேன் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது –

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்றுக்கொள்வதோடு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் நாம் மக்களுக்காக பொறுப்பெடுத்து மேற்கொண்ட பொறுப்புகளை மக்கள் எம்மிடமிருந்து எடுத்து புதியவர்களின் கைகளுக்கு கொடுத்துள்ளனர். இம்முடிவை வழங்கிய மக்களிடம் நாம் எவ்வித வெறுப்புகளும் கொள்ளப்போவதில்லை. பல்வேறு தேவைகளோடு வாழும் மக்கள் அவற்றை தீர்ப்பதற்கான வழியை புதிதான முறையில் தேர்ந்தெடுத்த ஒரு தீர்மானமாகவே கருகிறோம்.

நாம் பதவிகளில் இருக்கும்போது எம்மக்களுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் மக்களுடைய தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்தோம் என்ற மனத்திருப்தி முழுமையாக உள்ளது. ஏனையவர்களைப்போன்று எதையும் செய்யாது காலத்தைக் கடத்திய அரசியல்வாதியாக நான் இருக்கவில்லை என்பது நிதர்சனமானது. இந்த பொறுப்பை மக்கள் இப்போது புதிதாக கையளித்துள்ளவர்களும் இப்பணிகளை சிறப்பாக தொடர்வார்கள் என்ற நம்பிக்கையே மக்களிடத்தில் உள்ளது.

இத்தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், காலங்காலமாக பரம்பரை அரசியல் செய்யும் தேவையும் விருப்பமும் எனக்கில்லை என்பதோடு என்னால் எனது சொந்த விடயங்களை கவனிக்க கிடைத்த சந்தர்ப்பமாகவும் இதனை எடுத்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் மக்களுக்கு என்னால் ஆற்றக்கூடிய சேவைகளை அங்கஜன் இராமநாதன் என்ற தனிநபராக தொடர்ந்தும் மேற்கொள்வேன். தோல்விகளை சந்திக்காதவர்கள் ஒருபோதும் வெற்றியாளராவதில்லை. அதேநேரத்தில் தோற்றாலும் விட்டுச்செல்வதுமில்லை.

இத்தேர்தலில் எம்மீது நம்பிக்கையோடு வாக்களித்த 12,427 யாழ். கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# இரண்டு மலையகத் தமிழ்ப் பெண்கள் முதல் தடவையாக நாடாளுமன்றுக்கு

## தேசிய மக்கள் சக்தியின் மூலம் தெரிவு



மலையக அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக மலையக சமூகத்தைச் சேர்ந்த இரு பெண்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரான கலைச்செல்வி 33,346 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ள அதே வேளை பதுளை மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அம்பிகா சாமுவேல் 58,201 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். 1977 ஆம் ஆண்டு முதலாவது மலையக பிரதிநிதித்துவத்தைப் பெற்ற மலையக சமூகம் கடந்த 47 வருடங்களில் பெற்ற முதலாவது பெண் பிரதிநிதித்துவம் இது என்பது முக்கிய விடயம்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2024இல் வெளியிடப்பெற்றது